**யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் - 2020**

யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஐ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு மற்றும் 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 3603 - எஸ்ஆர்ஐ மற்றும் 3604 - எஸ்ஆர்ஐ (மேலதிக நிதியளிப்பு ஆம் கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை, வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வட மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,569.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவரிடமிருந்தன கடன் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமை காரணமாக 2015 ஒக்தோபர் 06 இல் இரத்து செய்யப்பட்டிருந்தது, ஏனென்றால், சுத்திகரிப்பு பொறிக்கு இரணைமடு குளத்திலிருந்து தண்ணீர் வளம் போதாமையால் செயற்திட்ட நோக்கெல்லை மீளமைக்கப்படுகின்றது. ஆகவே, 2017 திசெம்பர் 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் மேலதிக நிதியளிப்பு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலதிக நிதியளிப்பு கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,256 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 153 மில்லியனாக இருந்தது. அதில், ரூபா 18,24 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,016 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2026 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ரூபா 190.99 மில்லியன் தொகையான நாணயமாற்று இலாபம் நிதிக்கூற்றில் நிதி மூலங்களின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அந்த கட்டுநிதிக் கணக்குகள் செயற்திட்டத்தின் நாளாந்த செயற்பாடுகளிற்காக திறக்கப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கி டொலர் மீள்மதிப்பீட்டு கொடுக்கல் வாங்கல்கள் வரவு வைக்கப்படுவதுடன் அதே வங்கி கணக்கிற்கு மாதாந்தம் இ.ரூபாவில் செலவு வைக்கப்படுகின்றன. இ.ரூபா தொகைக்கு சமமான மாதாந்த டொலர் மீமதிப்பீடு 2011 இலிருந்து செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தேறி டொலர் மீள் மதிப்பு இலாபம்/ நட்டமாக காட்டப்படுகின்றன.<br><br>எவ்வாறாயினும், நடைமுறை பொறுப்புக்களின் கீழ் அதேபோல வகைப்படுத்துவதன் மூலம் நிதியளித்தலின் கீழ் காட்டப்பட வேண்டியிருக்குமாயின் செயற்திட்டமானது 2021 ஆம் ஆண்டிற்காக இதன்படி நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும். | நிதியளித்தல் வகுதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் ரூபா. 8,472.10 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 9,406.14 மில்லியனாக இருந்தது. செயற்திட்டமானது ரூபா 819.88 மில்லியன் இணக்கம் செய்யப்படாத மீதி இனங்காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் வித்தியாசத்தை திருத்துவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு மீதிகளையும் சமப்படுத்தும் நோக்கில் செயற்திட்ட மீதிகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பொதுப் பேரேட்டு மீதிகள் விரவான சீராக்குதலுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நிதிப்பிரிவுக்கு செயற்திட்டமானது வருடாந்தம் நடைபெறும் வேலை இணக்கக்கூற்றினை சமர்ப்பித்திருந்தது என உங்களுக்கு தெரிக்கப்படுகின்றது. இதன்படி, செயற்திட்டமானது அவசிய நடவடிக்கைக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நிதிப்பிரிவுக்கு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலை இணக்கக்கூற்று தயாரித்து சமர்ப்பித்திருந்தது. எவ்வாறாயினும் வழமை போல் செயற்திட்டம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிப்பிரிவு இரண்டு மீதிகளையும் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) FIDIC வழிகாட்டலின் பொது நிபந்தனையின் 14.8 ஆம் பிரிவின் பிரகாரம், சான்றுபடுத்திய விலைப் பட்டியல் 56 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வெண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியலின் GOSL பகுதியின் கொடுப்பனவு தாமதம் காரணமாக தாமத கட்டணமாக ரூபா 1.06 மில்லியன் கோரியிருந்தார். | கொடுப்பனவு 14.7 இற்கமை இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் செயற்திட்டமானது ஒப்பந்தகாரருக்கு 56 நாட்களிற்குள் கொடுப்பனவு செலுத்த வேண்டும். தாமதக் கொடுப்பனவு உட்பரிவு 14.8 உடன் இணங்காதிருக்குமாயின், உட்பிரிவு 14.7 ஆம் உட்பிரிவிற்கமைய ஒப்பந்தகாரர் கொடுப்பனவை பெற்றிருக்கவில்லை. ஒப்பந்தகாரர் தாமதக் கொடுப்பனவிற்காக நிதிக் கட்டணங்களாக தகுதியுடையவராக இருப்பார். | தாமத கொடுப்பனவு கட்டணங்களை தவிர்ப்பதற்கு உரிய காலத்தில் கொடுப்பனவை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இதன்படி, செயற்திட்டமானது தாமதப்பட்ட இலங்கை அரசாங்க நிதிக் கொடுப்பனவிற்காக நிதிக்கட்டணங்களை கணிப்பிட்டிருந்ததுடன் உயர்த்தப்பட்ட கோபுரத்தின் (ET01) நிர்மாணத்திற்காக சையிரா நிர்மாணக் கம்பனிக்கு இலங்கை அரசாங்க நிகளிலிருந்து 2020 யூலை 30 இல் 475467 ஆம் இலக்க காசோலை இலக்கம் ஊடாக ரூபா 1,061,723.18 செலுத்தப்பட்டது. | |
| (ஆ) | 2006 கொள்வனவு கைநூலின் 31 ஆம் இலக்க குறைநிரப்பின் 4.2.3 ஆம் பிரிவின் பிரகாரம், போட்டி கேள்வி நடைமுறையின் கொள்வனவு நடைமுறை முன் தகமைகளுடன் 17 வாரங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எவ்வாறாயினும், விளம்பரப்படுத்தல் திகதியிலிருந்து கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறி நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரரரை தெரிவுசெய்வதற்கு 3 ஆண்டுகளிற்கு மேலாக முழுக்கொள்வனவு காலத்தையும் செலவழித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 வரையும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | SWRO பொறிக்கான கேள்வி 2016 திசெம்பர் 07 கோரப்பட்டிருந்ததுடன் 2017 யூலை 17 இல் மூடப்பட்டிருந்தது. 2017 யூலை 17 இல் தொழில்நுட்ட கேள்வி திறக்கப்பட்டதுடன் 2018 யூலை 30 இல் நிதிக் கேள்வி திறக்கப்பட்டது.<br><br>எவ்வாறாயினும், 2020 ஆகஸ்ட் 31 வரை கேள்வி நடைமுறையின் போது கேள்வியாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து தெளிவுபடுத்தல் நடைமுறைக்காக 89 நாட்கள் எடுக்கப்பட்டது, ஆலோசனையாளர் உதவி மற்றும் மீளாய்விற்காக 41 நாட்கள் எடுத்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்காக 151 நாட்கள் எடுத்திருந்தது, SCAPC தீர்மானங்களிற்காக 379 நாட்கள் எடுத்திருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்துகள் மற்றும் ஒத்திசைவிற்காக 181 நாட்கள் எடுத்திருந்ததுடன் அமைச்சரவை விஞ்ஞாபன சமர்ப்பிப்பிற்காக 201 நாட்கள் எடுத்திருந்ததுடன் மேன்முறையீட்டு நடைமுறைக்காக 99 நாட்கள் எடுத்திருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

இது வடிவமைப்பு கட்டியொழுப்புதல் மற்றும் கடல் நீர் சுத்திகரிப்பு பொறி செயற்படுத்தல் என்பவற்றிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கான முதலாவது கொள்வனவாக உள்ளது. ஆகவே, கேள்வியாளர்கள் மத்திய வங்கி மற்றும் SCAPC மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து ஆழமான தெளிவு படுத்தல்களை போல குறைவான கோள்வியாளரை மதிப்பாய்வு செய்து பின்னர் தெரிவு செய்யும் நோக்கில் வேண்டப்பட்டது.

திருத்தப்பட்ட கொள்வனவு திட்டத்தின் பிரகாரம், 2020 இறுதியளவில் SWRO பொறி வழங்குவதற்கு செயற்திட்டம் மற்றும் உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கின்றது.

தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பாய்வு இரண்டும் இறுதியாக்கப்பட்டதுடன் பின்னர் 2020 சனவரி 07 இல் SCAPC அனுமதி பெறப்பட்டதுடன் 2020 பெப்ரவரி 10 இல் ஆசிய அபிவிருத்தி வங்கி ஒத்திசைவும் பெறப்பட்டது. 2020 பெப்ரவரி 19 இல் நிராகரிக்கப்பட்ட கேள்வியாளரால் மேன்முறையீடு செய்யப்பட்டமை காரணமாக பின்னர் விசாரணை நடைபெற்றதுடன் 2020 மே 28 இல் SCAPC தீர்மானம், PAB இன் ஒப்புதல் வழங்கப்பட்டது. 2020 செத்தெம்பர் 22 இல் இந்த ஒப்பந்தம் வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் அனுதித்திருந்தது.

பின்னர், ஒப்பந்தம் 2021 சனவரி 25 இல் M/S Suez International இற்கு வழங்கப்பட்டதுடன் தேசிய நீர வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு

சபை மற்றும் M/S Suez International இற்கு இடையில் 2021 பெப்ரவரி 23 இல் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி முறைமை பதிவேடுகளிற்கமைய ஒருதடவை L3603 இன் கீழ் SWRO RO பொறி வழங்கப்பட்டிருந்தது, வழங்கப்பட்ட ஒப்பந்த தொகை ஐ.அ.டொலர் 95.00 மில்லியன் ஒதுக்கீட்டில் ஐ.அ.டொலர் 64.05 மில்லியனாக உள்ளது.

SWRO RO பொறி ஒப்பந்தம் 2021 சனவரியில் வழங்கப்பட்டிருந்ததுடன் வேலைகள் 2021 மார்ச் 08 இல் தொடங்கப்பட்டது, திருத்தப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம் 2023 இறுதியளவில் நலனாளிகளிற்கு ஒழுங்காக தண்ணீர் வழங்குவதற்கு இயலக்கூடியதாக இருக்கும்.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| | நடவடிக்கை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பாரக்கப்பட்டது | உள்ளபடியானது | | |
| (அ) | பூமைவெளி, கரவெட்டி, நவினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு என்பவ்றில் தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணம் | 100% (05 தண்ணீர் கோபுரம்) | 44% | உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுர வேலைகளை (ET3) பூர்த்தியாக்கலிற்கான பிரதான காரணம் நாட்டில் நிலவும் கோவிட்- 19 தொற்று நோய் 2 ஆவது அலையாக உள்ளது. சுகாதார உத்தியோகத்தர்களின் | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மருத்துவ உத்தியோகத்தர் களிடமிருந்தான அறிவுறுத்தல்கள் மற்றும் வேறு மாகாணங்களிலிருந்தும் தீவகத்திற்குள் நுழைவதற்கும் கோபுர தொழிலாளர்கள் அனுமதிக்கப் பட்டிருக்காததுடன் தீவுப் பகுதி வேலைத்தளத்தில் விசேடமாக அவர்களுடைய கடுமையான விதிமுறைகள் முன்னேற்றத்தை பாதித்திருந்தது. மேலும், 2020 திசெம்பரிற்கு முன்னர் புறவி சூறாவளியை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளமும் முன்னேற்றத்தை பாதித்திருந்தது. ஆனால், தொழிலாளர் படையணி மற்றும் இயந்திரங்கள் வேலைத்தளங்களில் அதிகரிக்கப் பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர் நீடிக்கப்பட்ட வேலைப் பட்டியலிற்குள் வேலைகளை பூர்த்திசெய்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தார். | |
| (ஆ) | பளை, கொடிகாமம், மீசாலை, பூநகரி, புத்தூர், நாவற்குழி, காரைநகர் என்றவற்றில் விநியோக வலையமைப்பின் குழாயிடல் | 250 கிமீ | 190 கிமீ | ஒப்பந்தம் 2018.10.29 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020.12.02 இல் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. எனவே, விநியோக வலையமைப்பு ஒப்பந்தம் DN2 பூர்தியாக்கலில் உள்ள தாமதத்திற்கான பிரதான காரணம் நாட்டில் நிலவிய கோவிட் 19 தொற்று நோயின் 1 ஆவது மற்றும் 2 ஆவது அலையாக உள்ளது அத்துடன் ஒப்பந்தம் 2021.06.1 வரை நீடிக்கப்பட்டிருந்தது. . | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | யாழ்ப்பாண நகரப் பகுதியில் விநியோக | 283 கிமீ | இல்லை | இந்த ஒப்பந்தத்திற்கான கேள்வி 2018 யூலை 25 இல் கோரப்பட்டிருந்ததுடன் | 2020 திசெம்பர் 31 இல் கடன் முடிவுறுத்தப் பட்டமையால் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வலையமைப்பு குழாயிடல் | | | 2018 செப்தெம்பர் 27 இல் மூடப்பட்டது. தொழில்நுட்ப கேள்வி 2018 செப்தெம்பர் 27 இல் திறக்கப்பட்டதுடன் 2019 யூலை 10 இல் நிதி கேள்வி திறக்கப்பட்டது. SWRO பொறி ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் காரணமாக இந்த ஒப்பந்தமும் தாமதப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் இந்த ஒப்பந்தம் 2021.1.8 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023.1.23 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.<br><br>செயற்திட்டம் பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு வேலைத்தளத்தில் வராந்த கூட்டம் மற்றும் தலைமை அலுவலக உத்தியோகத்தர்களுடன் செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகத்தில் மாதாந்த கூட்டம் என்பவற்றின் மூலம் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டது. | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் | 50 கிமீ | இல்லை | இந்த ஒப்பந்த பொதிக்காக சகல வடிவமைப்பு வேலைகள் மற்றும் வரைவு கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது எனவே, கேள்வி கோரல்கள் செயற்திட்டத்தின் நிதி கிடைப்பனவில் தங்கியிருக்கும். | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கடல் நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் | ஒப்பந்தம் 2021 ஒக்தோபரில் பூர்த்தியாக்க வெண்டுமென பட்டியலிடப்பட்டது . | 2020 திசெம்பர் 31 வரை ஒப்பந்தம் வழங்கப் பட்டிருக்கவில்லை | இந்த ஒப்பந்தம் 2021 சனவரி 25 இல M/s Suez International இற்கு வழங்கப்பட்டதுடன் NWSDB மற்றும் M/S Suez International இற்கும் இடையில் 2021 பெப்ரவரி 25 இல் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்தது. பின்னர் வேலைகள் 2021 | கொள்வனவு நடைமுறையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், செயற்திடமானது நிதிப் பயன்பாட்டின் தாமதத்தினால் கடப்பாட்டுக் கட்டணங்களை செலுத்த |

| | | |
|---|---|---|
| | மார்ச் 08 இல் தொடங்கப் பட்டிருந்ததுடன் தற்போது வடிவமைப்பு வெலைகள் யாழ்ப்பாண தீவ கற்பத்தில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குவதற்கு 2023 திசெம்பர் இறுதியளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. | வேண்டியிருந்தது. |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) செயற்திட்டத்தின் திருத்திய நோக்கெல்லையின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியத்தில் நீர் வழங்கும் நோக்கில், கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறி பொருத்துவதையும் உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்தையும் 2022 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் பட்டியலிடப்பட்டது. ஆகவே, ரூபா 1,140 மில்லியன் கிரயத்தில் 15 தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் மற்றும் ரூபா 5,536 மில்லியன் கிரயத்தில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்ற குழாய்கள் பொருத்துதல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கீழான அந்த சகல நிர்மாண வேலைகளும் பூர்த்தியாக்கப் பட்டிருப்பினும் முறையான தண்ணீர் வளம் கிடைக்காமையால் பயனற்றிருந்தது. | PMCIU மற்றும் NWSDB இன் WSP பிரிவு இரண்டும் பயன்பாட்டில் உள்ள பிரதான பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பை இடுதலின் சாத்தியத் தன்மையை கவனமாக கண்காணிக்கின்றது. ஏற்கனவே, 44 கிமீ நீளமான பரிமாற குழாய்வழிகள் பூநகரி, நவினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் தண்ணீர் வழங்கலை மேற்கொள்வதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு பிரிவு மூலம் செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருந்தன.<br><br>மேலும், SWRO ஒப்பந்தம் வழங்கப் பட்டிருந்ததுடன் பட்டியலிடப்பட்டவாறு திட்டத்தை தொடங்கும் நோக்கில் வடிவமைப்பு வேலைகள் செய்பாட்டில் உள்ளன. | நோக்கங்களை நிறைவேற்றுவதற்றாக செயற்திட்டத்தின் கீழான பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைகளை பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் கடன் திருப்பிச் செலுத்தல்கள் 2017 இல் தொடங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவருக்கு திருப்பிச் செலுத்தல்களாக ரூபா 936.15 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஏனென்றால் தண்ணீர் பகிர்ந்து வழங்கல், செயற்திட்டமானது இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இடையில் 2017 திசெப்பர் 15 இல் கைச்சாத்திட்ட ADB கடன் உடன்படிக்கையால் ADB L3603 இன் கீழ் ஐ.அ.டொலர் 95.00 மில்லியன் ADB L3604 இன் கீழ் ஐ.அ.டொலர் 25 மில்லியன் என்பவனவாக ஐ.அ.டொலர் 120.00 மில்லியன் மேலதிக நிதிகள் நிதியளிப்புடன் மீளமைக்கப்பட்டிருந்தது. எவ்வித தாமதமும் இல்லாமல் நலனாளிகளிற்கு சீரான தண்ணீர் வழங்குவதற்கு தாழையடியில் SWRO RO பொறிக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் விசேடமாக ஐ.அ.டொலர் 95.00 மில்லியன் ADB L3603 மூலம் நிதியளிக்கப்பட்டது. ஆனால், கொள்வனவு நடைமுறை தாமதம் காரணமாக இந்த ஒப்பந்தம் ADB L3603 இன் கீழ் 2021 சனவரி 25 இல் வழங்குவதற்கு இயலக்கூடியதாக இருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகள் கடந்த பின்னரும் செயற்திட்டமானது கடன் இல. 3603 ஆம் இலக்க கடனின் கீழ் நிதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என வெளிப்பட்டது. ஆகவே, ரூபா 70.17 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளிற்கு எதிராக கடனளிக்கும் முகவரால் 2020 திசெம்பர் 31 வரை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | ADB கடன் உடன்படிக்கை பிரகாரம், இந்த கடன் வழங்குவதற்காக 2017 திசெம்பர் 15 இலிருந்து மே 15 இலும் நவம்பர் 15 இலுமாக ஒரு ஆண்டில் இருதடவைகள் அரசாங்கத்திற்கு நிதிக் கட்டணங்களை சாட்டுதல் செய்கின்றதுடன் இந்த கடனின் கீழ் ADB கைதவிர்ப்பாக ERD இற்கு அந்த கட்டணங்களை அறிக்கையிடுகின்றது. ERD இற்கு ADB இனுடைய அறிக்கையின் அடிப்படையில், DRMS-814 இனுடைய அறிக்கையில் JKWSSP இனுடைய கைதவிர்ப்பாக ERD அறிக்கையிட்டிருந்தது. | கடப்பாட்டு கட்டணங்களின் கழிப்பனவு தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடுவதற்கு நிறைவெற்றல் முகவர் வேண்டப்பட்டிருந்தார் (ஏனென்றால் கொள்வனவு தாமதத்தால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் உடன்பாடின்மையால் தாமதம் ஏற்பட்டது) |

## 3.3 வேலைத்தள வருகைகளில் செய்யப்பட்ட அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பூமைவெளி, கரவெட்டி, நவினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு என்பவ்றில் தண்ணீர் 05 கோபுரங்களின் நிர்மாண ஒப்பந்தம் ரூபா 565.09 மிலலியன் கிரயத்தில் 2019 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பரில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்டமானது 2021 ஏப்ரல் வரை நான்கு கோபுரங்கள் பூர்த்தியாக்குவதற்கு கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 மே மாதம் வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுர வேலைகளை (ET3) பூர்த்தியாக்கலிற்கான பிரதான காரணம் நாட்டில் நிலவும் கோவிட்- 19 தொற்றுநோய் 2 ஆவது அலையாக உள்ளது. சுகாதார் மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்தான அறிவுறுத்தல்கள் வேறு மாகாணங்களிலிருந்து தீவகத்திற்குள் நுழைவதற்கு கோபுர வேலையாளர்கள் அனுமதிக்கப் பட்டிருக்காததுடன் தீவக வேலைத்தளத்தில் விசேடமாக அவர்களுடைய விதிக்கப்பட்ட கடுமையான விதிமுறைகள் முன்னேற்றத்தை பாதித்திருந்தது. மேலும், 2020 திசெம்பரிற்கு முன்னர் புறவி சூறாவளியை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளமும் முன்னேற்றத்தை பாதித்திருந்தது.<br><br>அதன்பின்னர், தொழிலாளர் படையணி மற்றும் இயந்திரங்கள் வேலைத் தளங்களில் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர் நீடிக்கப்பட்ட வேலைப் பட்டியலிற்குள் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தார். எனவே, கோவிட் - 19 இன் 3 ஆவது அலை காரணமாக வேலைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதிகளவான தொழிலாளர்கள் தடுத்துவைத்தல் நடைமுறையினால் சென்றிருந்தனர், சீமெந்து கலவை இயந்திரமும் நிறுத்தப்பட்டதுடன் ஒப்பந்தகாரரின் வேண்டுகையில் ஒப்பந்தக் காலப்பகுதி 2021.9.28 வரை நீடிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

**கணக்காய்வு அவதானிப்பு**

நீர் வழங்கல் அமைசின் வாக்குப் பண பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்கான இலங்கை அரசாங்க நிதி ஒதுக்கீடு ரூபா 92.40 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டம் மீளய்வாண்டின் போது ரூபா 145.40 மில்லியன் செலவழித்திருந்தது.

**முகாமைத்துவத்தின் பதில்**

இது கொள்வனவு மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்துடன் தொடர்புடையது என உங்களிற்கு தெரிவிக்கின்றோம். செயற்திட்டமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நீர் வழங்கல் செயற்திட்ட பிரிவின் ஊடாக நீர் வழங்கல் அமைச்சிற்கு மூலதன பாதீடாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்க நிதி என்பவற்றின் கீழான அதன் நிதி வேண்டுகைகளை வருடாந்தம் சமர்பபிக்கின்றது. இதன்படி, செயற்திட்டமானது செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2020 இற்கான இலங்கை அரசாங்க நிதிகளின் கீழ் ஆரம்பத்தில் இ.ரூபா 2,014.72 மில்லியன் வேண்டப்பட்டிருந்தது. பின்னர் திருத்தப்பட்ட அமுலாக்கல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் செய்வதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது/ நீர் வழங்கல் அமைச்சிடமிருந்து ரூபா 369.68 மில்லியன் தொகை வேண்டியிருந்தோம் அத்துடன் ஒப்பந்தகாரர்களிற்கு இலங்கை அரசாங்க தாமத கொடுப்பனவுகளிற்காக வட்டி செலுத்தாமல் விலகியிருப்போம்.

எவ்வாறாயினும், நாங்கள் மொத்தமாக 2020 சனவரி முதல் திசெம்பர் வரை இ.ரூபா 145.40 மில்லியன் மாத்திரம் பெற்றிருந்தோம். அதேநேரம் செயற்திட்டம் இ.ரூபா 369.68 மில்லியின் கோரியிரந்தது. நாங்கள் இ.ரூபா 145.40 மில்லியன் பெற்றிருந்த பொதிலும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையில் ரூபா 13.98 மில்லியன் தொகையான கொடுப்பனவுப் பட்டியல்கள் செயற்திட்டத்தால் தீர்க்க முடியமல் இருந்தது. செயற்திட்டமானது 2021 இல் அந்த நிலுவையாகவிருக்கின்ற பட்டியல்களை தீர்ப்பதற்கு இயலக்கூடியவாறு இருந்தது.

**கணக்காய்வாளருடைய சிபார்சுகள்**

நிறைவேற்றல் முகவர் நிதி விலகல் இல்லாமல் பாதீட்டு ஒதுக்கீட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் கணப்பீட்டுச் சபை அறிக்கையின் பிரகாரம், ரூபா 25.06 மில்லியன், ரூபா 4.1 மில்லியன் மற்றும் ரூபா 57.26 மில்லியன் தொகையான முறையே ஆய்வு கூட உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் என்பவற்றினை பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2010 நவம்பார் மாத செயற்திட்ட நிர்வாக கைநூர்லின் பிரகாரம், செயற்திட்டமானது பிராந்தியத்தின் தண்ணீர் தர முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் நோக்கில் 2014 இல் இ.ரூபா 4,884,153.50 இற்கும் 2015 இல் இ.ரூபா 7,950,000.10, இற்கும் 2016 இல் ரூபா 12,227,646.50 இற்கும் ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. அவை செயற்திட்டத்தினுடைய பொருளிருப்பு பதிவேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஆய்வுகூட உபகரண விடயங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபையின் யாழ்ப்பாண பிராதேச முகாமையாளர் அலுவலகத்தின் பொருளிருப்பு பதிவேட்டில் பதியப்படுகின்றன. | செயற்திட்ட சொத்துக்களை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு 2028 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்தினுடைய தொழில்நுட்ப மற்றும் நிதி கணக்காய்வை மேற்கொண்டிருந்தது. உள்ளக கணக்காய்வு பிரிவு 2021 பெப்ரவரியில் அதன் கணக்காய்விற்காக JKWSSP இற்கு வருகை தருவதற்கு திட்டமிட்டிருந்தது. ஆனால், நாட்டில் நிலவிய கோவிட்- 19 தொற்று நோய் காரணமாக மாகாணங்களிற்கு இடையில் பிரயாண கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை உள்ளடங்கலாக அவர்கள் JKWSSP இற்கு வருகை தருவதற்கு இயலாதிருந்தது. எவ்வாறாயினும், நாட்டில் கோவிட் -19 நோய் தொற்றிலிரந்து நாடு சாதாரணமாக நிலைக்கு திரும்பபிய பின்னர் செயற்திட்டத்தின் தொழில்நுட்ப | உள்ளக கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மற்றும் நிதி கணக்காய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமென செயற்திட்டம் கருதுகின்றது.

**3.6 காணிச் சுவீகரிப்பு தொடர்பான விடயங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்திட்டத்தின் கீழ் பல்வேறு நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், உரிய காணிகளின் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றிப் பெறப்பட்டிருக்கவில்லை. | இது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அரச காணிகள், வேறு நிறுவனக் காணிகள மற்றும் முறையான பொறிமுறை இல்லாமல் கையேற்பதற்கான நடைமுறைகள் என்பவற்றினை இனங்காணும் அடிப்படையில் உள்ளது. அதிகளவான காணிச் சுவீகரிப்பு 2015 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 இல் பூர்த்தியாக்கப்பட்டு உடமையாக்கல் சான்றிதழ் பெறப்பட்டிருந்தமை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரிமையாண்மை மாற்றப்பட்டது எனக் கருதப்படும். எவ்வாறாயினும், சில காணிகள் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கும் வரையும் சில நிர்மாணம் தொடங்கப்பட்டிருக்காமையாலும் காணிச் சுவீகரிப்பு பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காணிகளின் உரிமையாண்மை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வெண்டும். |